<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 406/2024

Prosecution PW 1

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | பாலுசாமி |
| Father's Name | : | ஜெகநாதன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 10.06.2026.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் செல்லாண்டிபாளையத்தில் குடியிருந்துகொண்டு செண்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். நான் ராயனூரில் சுப்பிரமணியன் என்பவரது வீட்டில் கட்டிட வேலை செய்து கொண்டிருந்தபோது நான் வைத்திருந்த என்னுடைய இரும்பு சட்டர்கள் காணாமல் போனது சம்மந்தமாக சுப்பிரமணியன் என்பவரிடம்

கேட்டபோது அவர் போலிசாரிடம் புகார் கொடுக்கச் சொன்னார். அதன்படி நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனுவிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. **புகார் மனுவிலுள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி குவிமுச பிரிவு 161க்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)**

புகாரிலும் போலீஸ் விசாரணையிலும் ராயனூர், வெள்ளக் கவுண்டனூர் மெயின்ரோட்டிலுள்ள சுப்பிரமணியன் என்பவருக்கு சொந்தமான புதிய வீட்டில் கட்டிய பணிக்காக 60 செண்ட்ரிங் இரும்பு சட்டர்களை அடுக்கி வைத்திருந்ததாகவும், 09.08.2023 அன்று நானும் என்னுடன் வேலை பார்க்கும் சிவதேவன் இருவரும் இரவு 10.00 மணியளவில் வேலையை முடித்து வீட்டிற்கு சென்றுவிட்டோம் என்றும், மறுநாள் 10.08.2023 அன்று காலை 10.00 மணியளவில் பார்த்தபோது 6 இரும்பு சட்டர்களை காணவில்லை எனவும், உடனே நானும் ஓனர் சுப்பிரமணி மற்றும் சிவதேவன் ஆகியோர் பல இடங்களிலும் பழைய இரும்பு கடைகளிலும் தேடிப் பார்த்ததாகவும், பின்னர் அனைறைய தினம் 11.30 மணியளவில் நானும் சுப்பிரமணியன் மற்றும் சிவதேவன் ஆகியோர் ராயனூர், தில்லை நகர் பெட்ரோல் பங்க் அருகில் நின்றுகொண்டிருந்தபோது, ராயனூரிலிருந்து TN 54 Q 3808 என்ற ஆக்டிவா இருசக்கர வாகனத்தில் இரும்பு செண்ட்ரிங் சட்டர்களை ஏற்றிக் கொண்டு வந்தவரை தடுத்து விசாரிக்க அவர் சுப்பிரமணியன் வீட்டில் வைத்திருந்த எனது சட்டர்களை திருடியதாக கூறியதாகவும், அவரை விசாரிக்க தனது பெயர் விஸ்வநாதன் த/பெ. சௌந்தர்ராஜன் என்று சொன்னதாகவும், திருடுபோன

இரும்பு சட்டர்களை நான் அடையாளத்திற்காக எழுதியிருந்த ஆர்ஜே என்னும் எழுத்து பெயிண்டால் எழுதியிருந்ததை பார்த்து என்னுடைய சட்டர்கள் என்று உறுதி செய்ததாகவும் பின்பு எதிரியுடன் இரும்பு சட்டர்கள் மற்றும் ஆக்டிவா இருசக்கர வாகனத்துடன் காவல் நிலையம் வந்து புகார் கொடுத்ததாகவும், போலிசார் படிவம் 91 மூலம் மேற்படி பொருட்களை கைப்பற்றியதாகவும், அதில் நானும் சிவதேனும் சாட்சி கையொப்பம் செய்ததாக கூறிவிட்டு தற்போது ஏதோ ஒரு ஆதாயத்திற்காக அரசு தரப்பிற்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**